களையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, செங்கம் தொகுதியில் இருக்கிற பிரச்சினையை நாங்கள் பரிசீலனை செய்து அதற்கேற்ற உதவியைச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 595 திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

595—

ஓசூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி.

*9168 **திரு. கே. ஏ. மனோகரன்** :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஓசூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இடவசதியும் ஆசிரியர் எண்ணிக்கையும் இல்லாததால் இப்பள்ளியினை இரண்டு பள்ளிகளாகப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியில் சுமார் 3,500-க்கு மேற்பட்ட மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வகுப்பிலே 120-லிருந்து 140 வரை மாணவர்கள் இருக்கிற காரணத்தால் அந்தப் பள்ளி இறுதி தேர்ச்சியிலே 17 சதவீதம், 18 சதவீதத்திற்கு மேல் வராத காரணத்தினால் அந்தப் பள்ளியை இரண்டாகப் பிரித்தால் மாணவர்களுடைய கல்வித் தரம் நல்லமுறையில் அமையும். தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாக இருக்கிற காரணத்தால் மீண்டும் இதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரத்தைப் பொறுத்து மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 596, திரு. ஆ. செல்லதுரை, இருக்கையில் இல்லை.